# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **TAMBARAM** Weekly News Paper www.gstroadnews.com

Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar

Vol:14 Issue-27 18 Oct 2026 -24 Oct 2026 4 Pages - Free Circulation Ct: 99628 80902



**ANUJ HOMES**
(BUILDING CONTRACTOR)
CHROMEPET
HOME CONSTRUCTION
@Rs.2299/- Per sqft
INCLUDING
OHT & SEPTIC TANK, SUMP, ELEVATION WORK, ARCHITECTURAL DESIGN, ENGINEER SUPERVISION, BRANDED MATERIALS
Mob: 81481 11101 94446 54776



விளம்பரதாரர்களுக்கும், வாசகர்களுக்கும்
GST ROAD NEWS WEEKLY NEWSPAPER
இனிய ஆயுத பூஜை நல்வாழ்த்துக்கள்
Our Edition Chrompet, Tambaram Pallavaram, Selaiyur
ஆசிரியர்: K.முருகானந்தம் ஆதித்தன்
No. 4/7A, Padmanabhan Nagar, Karummari amman kovil 1st Street, Chrompet, Chennai - 600 044.
044 - 22236399 / 89395 26999



ஆட்கள் தேவை
**Poomex**
சிட்லப்பாக்கத்தில் உள்ள Poomex பனியன் ஏஜென்சி நிறுவனத்திற்கு
குடோன் வேலைக்கு ஆள் தேவை
ஆண் நபர் -1
சம்பளம் 15000 to 17000
Contact: 98421 90097

**PVSM AGRO SUPER MARKET**
PVSM அக்ரோ சூப்பர் மார்க்கெட்
(Our journey towards organic)
Good Food Healthy Life
STAFF REQUIRED IMMEDIATELY
SUPERVISOR | BILLING | PACKING | DELIVERY STAFF
Full time and Part time vacancies
Opening shortly @ KRISHANA NAGAR 2ND MAIN ROAD
(Near Hasthinapuram Bus Stand)
98409 02888 | 98404 08277

**FLATS FOR SALE @ CHROMPET**
EAST PUDHUVAI NAGAR
READY TO MOVE IN
Nr. VAISHNAVA COLLEGE SARAVANA STORE GATE 200 FT RADIAL ROAD
3 BHK - 1165 Sqft
2 UNITS
ONE FLAT ONE FLOOR
₹8500/- PER SQFT
CCTV SURVEILLANCE | CCP LIFT | AS PER VASTHU
FULLY FURNISHED
PREMIUM LIVING. PRIME LOCATION.
5 தனி வீடுகள் விற்பனைக்கு | குரோம்பேட்டை, கணபதிபுரம், ஏரிக்கரை தெரு | 2400 ச.அடி பட்டா மனை | 1.15 C
MR CONSTRUCTION BUILDING YOUR DREAMS
90035 29020 / 95000 35454





DELUXE FLAT FOR SALE
**SAINATH BUILDERS**
SELAIYUR
BALAJI NAGAR MAIN ROAD
DOUBLE & TRIPLE BEDROOM FLATS
(1200 Sqft - 1250 Sqft)
Opp. Bharath University, Via Murugan Super market, Indira Nagar Zion Matric Hr. Sec. School, Palani kalyana Mandapam, SDB Kalyana Mandapam.
COVERED CAR PARKING | LIFT TILL TERRACE DESIGN | FULLY TEAKWOOD | SAFE & PEACEFUL LOCATION
FOR BOOKING CONTACT 94448 39999 / 90032 82197





**FLATS FOR SALE**
@ CHROMEPET, HASTHINAPURAM, AGS COLONY
NEAR HASTHINAPURAM BUS STAND
3 BHK | 1430 SQ.FT. | EAST FACING
UDS - 653 SQ.FT. | ONLY THREE FLATS | ONLY ONE FLAT IN EACH FLOOR
AMENITIES:
LIFT | CCP | CCTV | AS PER VAASTU | BANK LOAN AVAILABLE | 30 FEET ROAD | 24/7 WATER | NO WATER LOGGING
NANDHA FOUNDATIONS PVT. LTD.
98401 07534
98412 17499

SCS — LOVE ALL SERVE ALL SKILL COMMITMENT SUCCESS
**VIJAYADASAMI ADMISSIONS OPEN**
வித்யாரம்பம்
S.C.S பள்ளியில் வித்யாரம்பத்துடன் தொடங்கட்டும்.
Pre KG, LKG, UKG, Montessori
Montessori & Teacher Training
குழந்தை பராமரிப்பு
விஜயதசமி சேர்க்கைகள் நடைபெற்று வருகிறது.
குறைந்த இருக்கைகளே உள்ளன.
SCS KINDERGARTEN SCHOOL
#15 Ranganathan Street, Nehru Nagar Chromepet, Chennai-44
Ph: 98408 79246 / 044-22235761





இனிய ஆயுத பூஜை நல்வாழ்த்துக்கள்
**PREMIUM 2 BHK FLATS FOR SALE @ CHROMEPET**

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
24 HRS POWER BACKUP
2 BHK - 941 Sqft

BALAJI NAGAR
Nr. PURUSHOTHAMAN NGR PERUMAL TEMPLE
24 HRS POWER BACKUP
2 BHK - 867 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
24 HRS POWER BACKUP
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
Rain Water Harvesting
CCP
CCTV
Video Door Phone
Automatic Water Tank Level Control
High Grade Bricks
READY TO MOVE IN!

Sankar Constructions BUILDING TRUST. CREATING HOMES.
98416 59929
98416 59930
Project Approved by: LIC HFL | HDFC BANK | SBI






# சுயம்புவாக முளைத்துள்ள குலசை முத்தாரம்மன்



குலசேகரப்பட்டினத்தில் சுயம்பு வடிவிலேயே முத்தாரம்மனை பக்தர்கள் ஆரம்ப காலங்களில் வழிபட்டு வந்தனர். அப்போது அன்னையின் திருமேனியினைக் கண்குளிரக் கண்டு, அவளைத் தரிசனம் செய்ய வேண்டும் என்று அவ்வூர் பக்தர்களுக்கு ஆவல் ஏற்பட்டது. அம்பாளிடம் இதற்காக மனமுருகி அவர்கள் வேண்டினர். அப்போது ஒருநாள், கோவில் அர்ச்சகரின் கனவில் அம்மன் தோன்றினாள். 'எனது திருவுருவைக் காண நீங்கள் அனைவரும் ஆவலாக இருப்பது தெரிகிறது. கன்னியாக்குமரி அருகே மைலாடி என்றொரு சிறிய ஊர் உள்ளது. அங்கு செல். அனைத்தும் நிறைவேறும்' என்று கூறினாள். மைலாடி பகுதியில் அதிக அளவில் பாறைகள் உண்டு. இதனை வெட்டி எடுத்து கலைநுணுக்கத்துடன் கடவுள் சிலைகளை நிறைய பேர் செய்து வருகின்றனர். இப்படி பக்தர்களின் விருப்பத்திற்கேற்ப, கற்களில் அற்புதமாக சிலை வடிவமைத்துக் கொடுக்கும் ஆற்றலை சுப்பையா ஆசாரி என்பவர் பெற்றிருந்தார். அவரது கனவிலும் குலசை முத்தாரம்மன் தோன்றினாள். குலசேகரன் பட்டினத்தில் தான் சுயம்புவாக விளங்கி இருப்பது பற்றி விரிவாகக் கூறினாள். அதுமட்டுமல்லாமல், தன் உருவத்தைக் காண அங்குள்ள பக்தர்கள் அனைவரும் ஆவலாக இருப்பதையும் ஆசாரிக்குத் தெரியப்படுத்தினாள். பின்னர், தனதுமற்றும் ஞானமூர்த்தீஸ்வரர் திருமேனியுடன் ஆசாரிக்குக் காட்சி அளித்த அன்னை, தங்களை நன்கு உற்று நோக்குமாறும், தென் திசையில் உள்ள ஆண் பெண் பாறையில் ஒரே கல்லில், ஒரே பீடத்தில் தங்கள் திருவுருவச் சிலையை வடித்துக் கொடுக்குமாறும் உத்தரவிட்டாள். தங்கள் சிலைகளைச் செய்து, தாங்கள் சுயம்புவாக முளைத்துள்ள இடத்திற்கு அருகாமையில் அந்தக் கற்சிலையை நிறுவ வேண்டும் என்றும் அந்தக் கனவில் ஆசாரிக்குக் கட்டளையிட்டு முத்தாரம்மன் மறைந்தாள். இந்தக் கனவு கலைந்ததும் திடுக்கிட்டார் ஆசாரி. கனவில் முத்தாரம்மன் தனக்கு ஆணை பிறப்பித்ததை உணர்ந்தார். குலசேகரப்பட்டினம் எங்கிருக்கிறது என்பது பற்றி பலரிடமும் விசாரித்து அறிந்து கொண்டார். அதன்பிறகு தன் மனதில் திடமாகப் பதிந்திருந்த அம்பாள் மற்றும் சுவாமியின் திருமேனியை அப்படியே கற்களில் சிலையாக வடித்தார். முத்தாரம்மன் கனவில் கூறியபடி குலசை அர்ச்சகர், அவ்வூரைச் சேர்ந்தச் சிலருடன் மைலாடி சென்றார். சுப்பையா ஆசாரியார் என்றுவிசாரித்துஅறிந்துஅவரைச் சந்தித்தார்கள். சுப்பையா ஆசாரி ஏற்கனவே ஞானமூர்த்தீஸ்வரர் முத்தாரம்மன் சிலையை செய்து வைத்திருந்தார். அந்தப் புனிதமான சிலையை உணர்ச்சிப் பெருக்குடன் பெற்றுக் கொண்டு அவர்கள் குலசேகரன்பட்டினம் திரும்பினர். முத்தாரம்மனின் விருப்பப்படியே அந்தச் சிலை, சுயம்புவாக முளைத்துள்ள அம்பாளின் அருகே பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த அன்னைதான் குலசேகரன் பட்டினத்தில் இன்றும் பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறாள். முத்தாரம்மன் அருகே ஒரே பீடத்தில் சுவாமி ஞானமூர்த்திஸ்வரர் வீற்றிருப்பது இந்த ஆலயத்தின் முக்கியச் சிறப்பாகும். இதுபோல் அம்பாளும், சிவனும் ஒருசேர வீற்றிருந்து பக்தர்களுக்குக் காட்சியளிப்பது இத்தலத்தில் மட்டுமே. இதில் மற்றுமொரு சிறப்பு என்னவென்றால், சுவாமி, அம்பாள் ஆகிய இருவருமே வடக்கு நோக்கி வீற்றிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் வேறு எந்த தலத்திலும் இத்தகைய காட்சியை காண இயலாது. மேலும் அம்பாளுக்கும், சிவனுக்கும் ஒரே நேரத்தில் பூஜை நடைபெறுகிறது என்பதும் முக்கிய விஷயமாகும். இந்த கோவிலின் தலமரமாக வேம்பு விளங்குகிறது.

# வெற்றிக்கு வித்திடும் விஜயதசமி



நவராத்திரியின் கடைசி நாளான விஜயதசமி, மிகவும் அதிர்ஷ்டகரமான நாளாக கொண்டாடப்படுகிறது. இந்த நாள் கெட்டதை நல்லது வெற்றிக் கொண்ட நாளாக, வெற்றியை குறிக்கும் நாளாக கொண்டாடப்படுகிறது. விஜயதசமி தினத்தன்று ராமன் ராவணனை வெற்றிக் கொண்ட நாளாகவும் மகிஷாசுரணனை தேவி துர்கை அழித்த நாளாகவும் கருதப்படுகிறது. தசரா கொண்டாட்டங்கள் 17ம் நூற்றாண்டில் மைசூரு மகாராஜாவின் கட்டளையின் பேரில் கோலாகலமாக கொண்டாட துவங்கப்பட்டதாக கூறப்படுகிறது. ராவணனையும், மகிஷாசுரனையும் வெற்றிக்கொண்ட நாள் இது என்பதைப்போல் மேலும் ஒரு புராணக்கதையையும் விஜயதசமிக்கு காரணமாக கூறப்படுகிறது. ஒருமுறை மன்னர் ரகுராஜரை கெவுட்சர் தன் குருவிற்கு கொடுக்க வேண்டும் என்று கூறி 14 கோடி தங்க காசுகளைக் கேட்டார். ரகுராஜரிடம் அவ்வளவு காசுகள் இல்லாததால் இந்திரனை கேட்க இந்திரன் குபேரனிடம் அயோத்திய நகரின் மேல் தங்க காசுகளை பொழிய சொன்னாராம். குபேரனும் தங்க காசுகளை பொழிய அதில் 14 கோடி காசுகளை தன் குருவிற்கு கொடுத்தது போக மீதியை கெவுட்சர் அயோத்தி மக்களுக்கு கொடுத்து விட்டாராம். தங்கக்காசு மழையாக பொழிந்த அந்த நாளே விஜயதசமி என்றும் கூறப்படுகிறது. விஜயதசமி நல்ல விஷயங்களைத் தொடங்கக்கூடிய நாளாக கருதப்படுகிறது. குழந்தைகளுக்கு வித்யாரம்பம் செய்யவும், புதிய கலைகளை கற்கத்தொடங்கவும் இந்த நாளை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த நாளில் தொடங்கும் காரியங்கள் எல்லாம் வெற்றியை தரும் என்பதே நம்பிக்கை. இந்தியா மட்டுமின்றி பங்களாதேஷிலும் தசரா கொண்டாட்டம் நடைபெறுகிறது. தென்னிந்தியாவில் விஜயதசமி மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது. நவராத்திரியின் ஒன்பது நாட்களும் கொலு வைத்து கொண்டாடிய பின் ஒன்பதாம் நாள் புத்தகம், வீட்டு உபகரணங்கள், கருவிகள் மற்றும் தொழிற்கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொலுவில் வைக்கப்படும். கலை கல்வி மற்றும் தொழில்களின் வெற்றிக்கு கடவுள்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது. அது முடிந்த பத்தாவது நாள் தசமி திதியில் எல்லாப் பொருட்களும் கொலுவிலிருந்து கலைக்கப்பட்டு எல்லா வேலைகளை தொடங்கப்படுகிறது. விஜயதசமியில் குருவிற்கு நன்றி செலுத்தும் வகையில் குருதட்சணை அளிக்கப்படுவதும் உண்டு. சிறு குழந்தைகள் பள்ளி போகும் முன்பு இந்த நாளில் நெல்லை கொட்டி அதில் 'அ' என்ற அட்சரத்தை குழந்தையின் கைபிடித்து எழுத வைப்பது தென்னிந்தியாவில் விஜயதசமியன்று செய்யப்படுகிறது.

# சரஸ்வதி பூஜை செய்யும் முறை



சரஸ்வதி பூஜை அன்று வீடுகளிலும், அலுவலகங்களிலும் பூஜைகள் செய்து வழிபடுவது வழக்கம். அவ்வாறு வழிபாடு செய்வதற்கு முன்பு, வழிபாடு செய்ய இருக்கும் இடத்தை தூய்மைப்படுத்த வேண்டும். சந்தனம், தெளித்து குங்குமம் இட வேண்டும். சரஸ்வதியின் படத்திற்கும், படைக்கப்பட வேண்டிய பொருட் களுக்கும் சந்தனம் தெளித்து குங்குமம் இடவும், படத்திற்கு பூக்கள் வைத்து அலங்கரிக்க வேண்டும். அன்னையின் திருவுருவின் பார்வையில்புத்தகங்களாவைத்து அதன் முன்பாக வாழையிலை விரித்து அதில் படையலுக்காக சமைக்கப்பட்டவைகளை வைக்க வேண்டும். சுண்டல், சர்க்கரை பொங்கல், புளியோதரை, எலுமிச்சை சாதம் போன்றவற்றை கலைவாணிக்கு நைவேத்தியங்களாக படைக்கலாம். வாழை இலையை வைத்து அதில் பொறி, கடலை, அவல், நாட்டு சர்க்கரை, பழங்களை வைக்க வேண்டும். செம்பருத்தி, ரோஜா, வெண்தாமரை மலர்கள் அன்னைக்கு உகந்த மலர்களாகும். இவற்றால் மாலைகள் தொடுத்து அன்னைக்கும், அவள் உறைந்திருக்கும் புத்தகங்களுக்கும் அணிவித்தல் வேண்டும். எதற்கும் விநாயகரே முழு முதலானவர், எனவே மஞ்சளில் பிள்ளையார் பிடித்து பூஜையில் வைத்து சுக்லாம் பரதரம் விஷ்ணும் சஸிவர்ணம் சதுர்புஜம்! ப்ரசந்த வதனம் தீயாயேத் சர்வ விக்நோப சாந்தயே' என்று கூறி விநாயகரை வணங்கிய பின்னரே சரஸ்வதிக்கான பூஜையை ஆரம்பித்தல் வேண்டும். சரஸ்வதி பூஜையின் போது 'துர்க்கா லட்சுமி சரஸ் வதீப்யோ நம' என்று கூறி பூஜையை ஆரம் பிப்பது நன்று. பூஜையில் கலசம் வைத்தும் கலைவாணியை வணங்கலாம். கலசம் வைத்து அம்பிகையை முறைப்படி எழுந்தருளச் செய்து பூஜிப்பதால் கூடுதல் நலன் கிடைக்கும். பூஜையின் போது வீட்டில் உள்ள குழந்தைகள், பெண்கள் உள்பட அனைவரும் கலைவாணிக்குரிய பாடல்களைப் பாடி வணங்கலாம். சகலகலாவல்லி மாலை பாடல்களை பாராயணம் செய்யலாம். நவராத்திரி நாட்களில் அன்னை யின் அருள்பெற ஒன்பது நாட்களும் விரதமிருந்து பூஜிக்க இயலாதவர்கள் சரஸ்வதி பூஜை அன்று மட்டும் அம்மனை பூஜித்து வணங்கினால் போதும், அம்பிகையின் அருள் பூரணமாய் கிடைக்கும்.




**குரோம்பேட்டையில் ஒரு லட்சம் மரக்கன்று வழங்கும் விழா சரத்குமார் பங்கேற்பு.**

குரோம்பேட்டையில் கிரீன் சிட்டி அரிமாசங்கம் சார்பில் ஒரு லட்சம் மரக்கன்றுகள், பூச்செடிகள் நிலவேம்பு பொட்டலங்களை பொதுமக்களுக்கு அமைச்சர் சரத்குமார் வழங்கினார். இதனையடுத்து குமரன் குன்றம் கோவிலுக்கு அமைச்சர் வந்தபோது கோயிலின் அறங்காவலர் அன்பழகன், கிருஷ்சந்தானம் சால்வை அணிவித்த நிலையில் கோயில் அர்சகர்கள் மூலம் பூரண கும்ப மரியாதை அளித்தனர். இந்த நிகழ்ச்சியில் கீரின் சிட்டி அரிமா சங்க நிறுவனர் நா.கண்ணன், தலைவர் நரேஷ்குமார், செயலாளர் செல்லப்பா,பழனி, ஹரிகரன், தேசிய சித்தமருத்துவமனை இயக்குனர் மருத்துவர் செந்தில்வேல் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்.

# CLASSIFIEDS


## RENTAL

FLAT FOR RENTAL
HASTHINAPURAM
VENKATRAMAN NAGAR
6TH MAIN ROAD
OPP PARK
3 BHK | FIRST FLOOR
1150 SQFT
CAR PARKING
CONTACT 87788 64431

## FLAT RESALE

FLAT FOR RESALE @ PERUMBAKKAM
CLOSE TO METRO
- 60 FT ROAD
- NORTH FACING
- SEMI FURNISHED
- 880 SQFT
- 20 K RENTAL INCOME

9444283289

FLAT FOR RESALE
CHROMPET, RADHA NAGAR NR, RLY STATION
2 BHK - 777 SQFT
UDS - 466 SQFT
₹ 45L
RAJAKILPAKKAM
2 BHK
₹ 35L
99620 03409

FLAT FOR RESALE
@CHROMPET
PURUSHOTHAM NAGAR
1640 SQFT | UDS 875 SQFT | CCP
1 BHK 530 SQFT | UDS 300 SQFT
CALL 80722 30451

## PLOT SALE

PLOT FOR SALE
@ AGARAMTHEN
NEAR MAPPEDU
NEAR BHARATH MEDICAL COLLEGE
CMDA | CLEAR TITLE | GATTED COMMUNITY | LIMITED PLOTS AVAILABLE
9940137934

PLOT FOR SALE
TAMBARAM
IRUMBULIYUR, ARUL NAGER
25 × 40 SQFT
NORTH FACING
ADAMBAKKAM
SARASWATHY NAGAR
15 × 60 SQFT
EAST FACING
8939006888
7449068888

FLAT FOR RESALE
@ CHROMPET
NEW COLONY
1 ST MAIN ROAD
2 BHK | 700 SQFT
UDS 417 SQ.FT
GROUND FLOOR
SEMI FURNISHED
CALL: 98408 82210

## BUILDING CONTRACT

புதிய வீடு கட்ட & பழைய வீடு புதுப்பிக்க
Contact:
KR BUILDERS
BUILDING CONTRACTOR & ENGINEER
BUDGET FRIENDLY BUILDERS
CHROMEPET
8072 499969

FLAT FOR RESALE @
TAMBARAM, MUDICHUR
2 BHK
875 SQFT
UDS - 460 SQFT
LIFT | CAR PARKING
CALL - 80722 30451

## DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999




நவராத்திரியை முன்னிட்டு சிட்லபாக்கம் திருமங்கை மன்னன் குறுக்குத் தெருவில் உள்ள கணேசன் இல்லத்தில் நவராத்திரி கொலு வைத்து வழிபாடு செய்த போது எடுத்த படம்.

## குரோம்பேட்டையில் நடைமேடையை சுரங்கப்பாதையுடன் இணைக்க கோரிக்கை:



குரோம்பேட்டை ரெயில் நிலைய நடைமேடையை ராதாநகர் சுரங்கப்பதையுடன் இணைக்க வேண்டி நலச்சங்கத்தினர் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.குரோம்பேட்டை ராதாநகர் சுரங்கப்பாதையுடன் நடைமேடை இணைக்கும் படிக்கட்டுகளை ரெயில்வே நிர்வாகம் அமைக்க கோரி தாம்பரம் மாநகராட்சி 2,3 மண்டல குடியிருப்போர் நலச்சங்க இணைப்பு மைய நிர்வாகிகள் ரெயில்வே நிர்வாகம் உண்மையை மறைப்பதாக தெரிவித்து அவசர செய்தியாளர் சந்திப்புக்கு குரோம்பேட்டை ரெயில் நிலைய நடைமேடையில் திரண்டனர்.இணைப்பு மைய செயலாளர் முருகையன், தலைவர் ஸ்ரீதர், பொருளாளர் அரசி, சிட்லபாக்கம் குடியிருப்போர் இணைப்பு மையத்தின் தலைவர் விஸ்வநாதன்,சாந்தி நகர் குடியிருப்போர் நலச்சங்க செயலாளர் குரோம்பேட்டை நாசர், போலீஸ் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பல்வேறு குடியிப்போர் நலச்சங்க முக்கிய நிர்வாகிகள் திரண்டனர்.




மழைக்காலங்களில் கிடைக்கப்படும் அரிய மழை நீரை சேமிக்கும் விதத்தில் சென்னை சென்ட்ரல் சிட்லபாக்கம் லயன் சங்கத்தின் சார்பில் சிட்லபாக்கம் பரிமளா சிட்டிபாபு மற்றும் மாமன்ற உறுப்பினர் சி.ஜெகன் ஏற்பாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் லயன்ஸ் சங்கத்தின் உலக சேவை சேவை தினத்தை முன்னிட்டு மாவட்ட தலைவர் பாஸ்கர் முன்னிலையில் மாவட்ட ஆளுநர் லயன் துரைராஜ் மற்றும் முன்னாள் மாவட்ட ஆளுநர் விட்டோ பிளாக்கா அவர்களால் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் திறந்து வைக்கப்பட்டது. இது மட்டும் இன்றி ஆங்காங்கே சிட்லபாக்கம் பகுதியில் ஜெகன் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த மழை நீர் சேகரிப்பு தொட்டிகளை சீரமைக்கும் பணியும் மற்றும் அதனை பராமரிக்கும் பணியும் இந்த சேவை தினத்தன்று நடைபெற்றது. உடன் சங்க தலைவர் ஜெய்கனேஷ், சங்க நிர்வாகிகள் ஐஸ்வர்யா, நாகேந்திரன், மணிமாறன், பாபு, கோவிந், நசீர், அமிர்தராஜ், கலையன்பன், புகழேந்தி, முரளிமோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மேற்குத் தாம்பரத்தில் ஆதரவற்ற குழந்தைகளுக்காக குட் லைப் சென்டர் என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது.



ஆதரவற்ற குழந்தைகளுக்கு அன்பும் ,அரவணைப்பும் அளித்து, அவர்களின் வாழ்க்கையில் கல்வி, பாதுகாப்பு மற்றும் தன்னம்பிக்கையை உருவாக்கும் உயரிய நோக்கத்துடன் 1996 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது குட் லைஃப் சென்டர் (Good Life Centre). ஆரம்பத்தில் மூன்று குழந்தைகளுடன் எளிமையாகத் தொடங்கிய து

குட் லைஃப் சென்டரின் நிறுவனர் மற்றும் செயலாளர் கே.பாஸ்கரன் அர்ப்பணிப்பும், தன்னார்வலர்கள், பணியாளர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் ஆதரவும் இந்த வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருந்து வருகின்றன.

சாதி, மதம், இனம் என்ற வேறுபாடுகளைக் கடந்து, ஒவ்வொருவரையும் குடும்ப உறுப்பினர்களாகக் கருதி அன்புடனும் அக்கறையுடனும் பராமரிப்பதே இந்நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கை யாகும்.

குழந்தைகளுக்கு உணவு, உடை, தங்குமிடம், மருத்துவப் பராமரிப்பு ஆகிய அடிப்படைத் தேவைகளுடன் தரமான கல்வியும் வழங்கப் படுகிறது. பள்ளிக் கல்வியைத் தொடர்ந்து உயர்கல்வி பயில்வதற்கும், கணினிப் பயிற்சி, தையல் மற்றும் தொழில்திறன் பயிற்சிகள் மூலம் தன்னிறைவு பெறுவதற்கும் ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஒரு குழந்தை கல்வி கற்று, தன்னம்பிக்கையுடன் வளர்ந்து, சமூகத்தில் தனக்கான இடத்தை உருவாக்கிக் கொள்வதே இந்நிறுவனத்தின் முக்கிய இலக்காகும்

குட் லைஃப் சென்டர் (Good Life Centre)7-B, லோகநாதன் தெரு, வித்யா திரையரங்கம் அருகில், மேற்கு தாம்பரம், சென்னை – 600 045.தொலைபேசி: 04422264151 / 22264152, 9500129070, 9444994153

மின்னஞ்சல் : goodlife1996@gmail.com

இணையதளம்: www. goodlifecentre.org




சிட்லபாக்கம் திருவேங்கடமுடையான் திருக்கோவிலில் ஸ்ரீ மியூசிக் அகாடமி சார்பில் நவரச நவராத்திரி என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஸ்ரீ மியூசிக் அகாடமியின் 35க்கு மேற்பட்ட மாணவர்கள் பரதநாட்டியம் வாய்ப்பாட்டு உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினர். அந்த மாணவர்களுக்கு திருவேங்கடமுடையான் திருக்கோவில் தலைவர் எம்.பாலசந்திரன், செயலாளர் வி.ராமதுரை, ஸ்ரீ மியூசிக் அகாடமி பிரிவு தலைவர் சோமேஷ் ஆகியோர் விருதுகளை வழங்கினர்.

இந்த ஸ்ரீ மியூசிக் அகாடமி மூலம் 20 ஆயிரம் மாணவர்கள் இதுவரை படித்து முடித்துள்ளனர். வருகிற 20 ஆம் தேதி விஜயதசமியை ஒட்டி மாணவர் சேர்க்கை தொடங்குகிறது. மாணவ மாணவியர் முன்பதிவு அக்டோபர் 20 மாலை 5 மணி முதல் 7 மணி வரை நடைபெறும். மேலும் தொடர்புக்கு : 9940799798

## போதைப் பொருளுடன் பிடிபட்ட த.வெ.க நிர்வாகி

நாகப்பட்டினத்தில் சுமார் 100 கிலோ அளவிலான உயர்ரக போதைப்பொருள் பதுக்கியதில் தவெக நிர்வாகி கைது செய்யப்பட்டார். கட்சிக்குள்ளேயே போதைப் பொருள் கடத்துவோரை வைத்துக்கொண்டு, பொதுவெளியில் போதைக்கு எதிராக மாரத்தான் ஓடி நடிப்பதில் என்ன பயன்? என்று டிடிவி தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தனி வீடுகளிலும் பார்க்கிங் கட்டாயம்

அடுக்குமாடி குடியிருப்புகளை போல தனி வீடுகளுக்கு பார்க்கிங் கட்டாயம்ஆக்கப்பட்டுள்ளது

3,300 சதுர அடி வரையிலான தனி வீடுகளில் 2 பைக், 2 கார்கள், 3,300 சதுரஅடிக்கு மேல் உள்ள வீட்டில் 4 பைக், 4 கார்கள் நிறுத்துமிடம் ஒதுக்குவது கட்டாயம் என விதிகள் திருத்தப்பட்டு உள்ளன

## அத்வானி மருத்துவமனையில் அனுமதி

பாஜகவின் மூத்த தலைவரான எல் கே அத்வானி நுரையீரல் பிரச்சனை காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

98 வயதானவர் தற்போது டெல்லியில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் உடல்நிலை குறித்து அறிக்கை வெளியிடப்பட உள்ளது.

## ஆரோக்கிய நன்மைகளை தரும் ஜாக்கிங்

மூளையில் இருந்து கால்கள் வரை பல ஆரோக்கிய நன்மைகளை வாரித் தருகிறது ஜாக்கிங். எலும்புகளுக்கும், கால்களுக்கும் மட்டுமல்ல நல்ல உறக்கத்திற்கு, ஆயுளை நீட்டிக்க, மனநிலையில் சிறந்த முன்னேற்றம் காண என உடல் ரீதியாக பல நன்மைகளை தருகிறது ஜாக்கிங். அதற்கென்று நீங்கள் உசைன் போல்ட்டை போல எல்லாம் ஓட வேண்டும் என்றில்லை. மிதமான வேகத்தில் ஜாக்கிங் போல ஓடி பயற்சி செய்தாலே போதுமானது.இனி, ஜாக்கிங் செய்வதனால் ஏற்படும் நன்மைகளை பார்க்கலாம். மன அழுத்தம் இருப்பவர்கள் குறைந்தது தினமும் அரைமணி நேரம் ஜாக்கிங் செய்து வந்தால் மனநிலையில் நல்ல முன்னேற்ற காணலாம். தினமும் 10 20 நிமிடங்கள் ஜாக்கிங் செய்து வந்தால், உங்கள் மரணத்திற்கான சதவீதம் 30 60% குறைகிறதாம். தினமும் ஜாக்கிங் செய்வதனால் உடல் எடை குறையும். வாக்கிங் செய்வதை விட இரண்டில் இருந்து மூன்று மடங்குவரை அதிக உடல்எடைக் குறைவு ஏற்படும். தினமும்



ஜாக்கிங் செய்பவர்களுக்கு மற்றவர்களை விட 25% குறைவாக தான் மூட்டு வலிப்பிரச்சனைகள் வருகிறது. ஜாக்கிங் செய்வதை வழக்கமாக வைத்திருந்தால், உங்கள் நுரையீரல் நன்கு விரிவடையும், இரத்த ஓட்டம் சீராகும், உடற்திறனில் நல்ல மாற்றம் தெரியும். தினமும் குறைந்தது ஒரு கி.மீ தூரம் ஜாக்கிங் சென்று வந்தீர்கள் என்றால் இதயப் பாதிப்புகள் வரும் வாய்ப்புகள் 50% வரை குறையும். குறைந்தது வாரம் ஐந்து நாட்களாவது அரைமணி நேரம் ஜாக்கிங் செய்து வந்தால் நீரிழிவு நோய் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் குறையும். தினமும் ஜாக்கிங் செய்வதனால் உங்கள் எலும்புகள் வலுமை அடைகின்றன. இதனால் முதுமையில் ஏற்படும் மூட்டுப் பிரச்சனைகளைத் தவிர்க்கலாம். தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் ஜாக்கிங் செய்வதனால் தூக்கமின்மை குறையும், நல்ல உறக்கம் வரும்.

## மறைந்த தேவா உடலுக்கு அரசு மரியாதை.

மறைந்த இசையமைப் பாளர் தேவா உடலுக்கு அரசு மரியாதை அளிக்கப்படும்.

இசையுலகுக்கு ஆற்றிய சேவையை சிறப்பிக்கும் விதமாக இறுதி சடங்கிற்கு அரசு மரியாதை தமிழ்நாடு அரசு.மறைந்த இசையமைப் பாளர் தேவா உடலுக்கு ராணிப்பேட்டை ஆற்காடு அருகே உள்ள மாங்காடு கிராமத்தில் இறுதிச் சடங்கு.

சென்னை தியாக ராய நகர் இல்லத்தில் பொது மக்களின் அஞ்சலிக் காக தேவாவின் உடல் வைக்கப்பட உள்ளது.

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES, EXSERVICE MAN
AGE - 26 - 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

சிட்லபாக்கத்தில் உள்ள பள்ளிக்கு எலக்ட்ரீசியன் தேவை
Timings : 8.15 am to 6 pm
98402 72483

GST ROAD NEWS
FOR ADVERTISEMENT
DETAILS CONTACT
89395 26999 | 044-22236399









தாம்பரம் மாநகராட்சிக்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள ஆணையாளர் ரா. சரண்யாவை தாம்பரம் மாநகராட்சி2,3 மண்டல குடியிருப்போர் நலச்சங்க இணைப்பு மைய நிர்வாகிகள் தலைவர் ஸ்ரீதர், செயலாளர் முருகையன், பொருளாளர் அரசி நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை மனுவாக கொடுத்து வாழ்த்து தெரிவித்த போது எடுத்த படம்.

## சசிகலா, டிடிவி. தினகரன் மட்டுமல்ல.. ஓ.பி.எஸ் கூட மீண்டும் அ.தி.மு.கவிற்கு வரவேண்டும்.

31 ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆண்ட அ.தி.மு.கவை அப்படியெல்லாம் ஒன்றும் செய்துவிட முடியாது.. அண்ணன் இ.பி.எஸ் அனைத்தையும் செய்வார் என்று நம்புகிறேன் என்றும் எஸ்.பி.வேலுமணி பேட்டி.




## ஒய்வூதியர்களுக்கு அரசு புதிய சலுகை

TAPS திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறும் அரசு ஊழியர்களின் இடைக்கால ஒய்வூதியத்தில் கூடுதலாக வழங்கப்பட்ட தொகையைத் தவணைகளில் பிடித்தம் செய்யும் நடவடிக்கையை நிறுத்த அரசு உத்தரவிட்டு உள்ளது. இடைக்கால ஒய்வூதியத்துடன் 60% அகவிலைப்படி நிவாரணமும் வழங்கப்படும் எனத் தெரிவித்த அரசு, கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர் உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசு அறிவுறுத்தி உள்ளது



புரட்டாசி 5 வார சனிக்கிழமையை முன்னிட்டு திருமலை நகர் சஞ்சீவி வரத ஆஞ்சநேயர் திருக்கோயில் ஆஞ்சநேயர் ராஜ மாருதி அலங்காரம் (தர்பார் சேவை) பக்தர்களுக்கு காட்சியளித்த போது எடுத்த படம்.




## அனிருத் திருமணம் மோடிக்கு அழைப்பு



பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து, காவியா கலாநிதி மாறன் அனிருத் ரவிச்சந்தர் திருமண வரவேற்பு அழைப்பிதழை வழங்கினார் சன் டிவி குழுமத் தலைவர் கலாநிதி மாறன். அப்போது காவேரி கலாநிதி, அனிருத் ரவிச்சந்தரின் பெற்றோர் லட்சுமி, ரவிச்சந்தர் உடன் இருந்தனர்.










Published by K.MURUGANANTHAM ADITYAN Plot No: 4/7 A,Padmanaban Nagar, Karumariamman Kovil 1st Street,Chrompet -600 044. Printed by him B.Ashokkumar at Rathna Offset Printers,No.40,Peter's Road,Royapettah,Ch-14.Editor K.MURUGANANTHAM ADITYAN RNI NO.TNBIL / 013 / 48725